உம்முடைய வசனமே சத்தியம். யோவான் 17:17

# மனித ஆத்துமா - 2

## வேதாகம முரண்பாடுகள்

பாடம் - 13



# வேதாகமத்தின் மாபெரும் சத்தியங்கள்

# வேதாகமத்தின் மாபெரும் சத்தியங்கள்


## பாடம் : # 13

## மனித ஆத்துமா - 3
## வேதாகம முரண்பாடுகள்

**உங்கள் கவனத்திற்கு :** **ஒவ்வொரு வசனக்குறிப்பையும், தயவுசெய்து உங்கள் வேதாகமத்திலிருந்து முழுமையாக வாசித்தறியவும்.**

கிறிஸ்துவுக்குள் பிரியமான சகோதர, சகோதரிகளே!

கடந்த பாடத்தில் நாம் **"ஆத்துமா"** மற்றும் **"ஆவி"** என்பவைகளை பற்றிய தெளிவான உண்மையை வேத வசனங்கள் மூலமாக ஆராய்ந்து அறிந்தோம். இன்று நாம் இந்த **சத்தியத்திற்கு முரண்பாடாக** நாம் நினைக்கத் தோன்றும் வேத பகுதிகளை புரிந்து கொள்ள முயற்சிக்கலாம்.



**இவைகள், மேலோட்டமாக பார்க்கையில், ஆத்துமா மரணத்திற்கு பின்பும் "உயிரோடிருக்கிறது" என்ற கருத்தை முன் வைக்கின்றன.**

ஆனால், அது அப்படியல்ல என்பதை, நாம் ஒவ்வொன்றாக ஆராய்ந்து பார்க்கலாம்.

1

**1 சாமுவேல் 28:7-19**

(வசனங்கள் முழுவதையும் வாசிக்கவும்)

இங்கு இஸ்ரயேலின் இராஜாவாகிய சவுல் அஞ்சனம் பார்க்கிற ஒரு ஸ்திரீயை அணுகி, மரித்துப் போன தீர்க்கதரிசியான சாமுவேலிடம் சில காரியங்களைக் குறித்து உரையாட முயற்சிக்கிறார். அவளை **"எந்தோர்"** என்ற இடத்தில் கண்டுபிடிக்கிறார்.



பின்பு நாம் வாசிக்கையில்,

**1 சாமுவேல் 28:8**

**"...சவுல் வேஷம் மாறி, வேறு வஸ்திரம் தரித்துக்கொண்டு..."**

**ஆம், சவுலின் உயரமும் அவருடைய சரீர தோற்றமும் இஸ்ரயேல் மத்தியில் பிரபலமானதினால், அவர் வேஷம் மாறி அங்கு சென்றார்.**

இதை **1 சாமுவேல் 10 : 23** –ல் காணலாம். தொடர்ந்து நாம் வாசிக்கையில்,



**1 சாமுவேல் 28:9**

**"அதற்கு அந்த ஸ்திரீ, சவுல் அஞ்சனம் பார்க்கிறவர்களையும், குறிசொல்லுகிறவர்களையும், தேசத்தில் இராதபடிக்கு நிர்மூலமாக்கின செய்தியை நீர் அறிவீரே, என்னைக் கொன்றுபோடும்படி நீர் என் பிராணனுக்குக் கண்ணிவைக்கிறது என்ன என்றாள்."**

ஆம், அந்த ஸ்திரீ இராஜாவாகிய சவுலின் மூலம் அஞ்சனம் பார்க்கிறவர்களுக்கு விரோதமாக நிறைவேற்றப்பட்ட கடுமையான சட்டங்களை கூறி தான் அப்படிப்பட்டவள் அல்ல என்று மறுக்கிறாள்.

### இங்கு இராஜாவாகிய சவுல் இதை ஏன் செய்தார் ?

....என்ற கேள்வி எழும்புகிறது. இதைக் குறித்து நாம் உபாகமத்தில் வாசிக்கையில்,

**உபாகமம் 18:10-12**

**"....தீக்கடக்கப்பண்ணுகிறவனும், குறிசொல்லுகிறவனும்.... சூனியக்காரனும், மந்திரவாதியும்.... மாயவித்தைக்காரனும்.... செத்தவர்களிடத்தில் குறிகேட்கிறவனும்.... தேவனாகிய கர்த்தர் அவர்களை உன் முன்னின்று துரத்தி விடுகிறார்."**



ஆம், இங்கு குறிசொல்லுகிறவர், நாள் பார்க்கிறவர், அஞ்சனம் பார்க்கிறவர் மற்றும் சூனியக்காரரை அணுகுவதற்கு எதிராக தேவன் கொடுத்திருந்த தெளிவான கட்டளைகளையும், அவர்கள் தேவனுடைய பார்வையில் "அருவருப்பானவர்கள்" என்பதையும் நாம் காண்கிறோம். சவுலும் கூட, தேவனுடைய இந்த கட்டளையை சட்டமாக மாற்றியிருந்தார்.

### அப்படியானால், நடந்தது என்ன ?

### இராஜாவாகிய சவுலிடம் இப்படிப்பட்ட மாற்றங்கள் எப்படி வந்தது ?

இதற்கான பதிலை சாமுவேலின் புத்தகத்தில் வாசிக்கையில்,

**1 சாமுவேல் 16:14**

**"கர்த்தருடைய ஆவி சவுலை விட்டு நீங்கினார், கர்த்தரால் வரவிடப்பட்ட ஒரு பொல்லாத ஆவி அவனைக் கலங்கப்பண்ணிக்கொண்டிருந்தது"**



தேவனுடைய கற்பனைகளுக்கு சவுல் கீழ்ப்படியவில்லை. - **1சாமுவேல் 15 : 10-35.**

இங்கு அமலேக்கியர்களை முற்றிலும் அழிப்பதற்கு கட்டளை பெற்றிருந்த போதிலும், அதற்கு கீழ்ப்படியாமல் போனான். கீழ்ப்படியாமையினாலே தீர்க்கதரிசியான சாமுவேலும் அதற்கு பின்பு சவுலிடம் பேசுவதை நிறுத்தினார்.

அதற்கு பின்பு அவரை காணவும் இல்லை என்று வேத வசனம் குறிப்பிடுகிறது. **(1சாமுவேல் 15 : 35).** இப்படியாக, தேவனுடைய ஆவியை சவுல் இழந்து, அது அவருக்குள் அநேக மாற்றங்களை ஏற்படுத்தியது.

இதினிமித்தம் கீழுள்ள வசனத்தில் சொல்லியிருக்கிறபடி அவன் பயமுள்ளவனானான்.

**2 தீமோத்தேயு 1 : 7**

**“தேவன் நமக்குப் பயமுள்ள ஆவியைக் கொடாமல், பலமும் அன்பும் தெளிந்த புத்தியுமுள்ள ஆவியையே கொடுத்திருக்கிறார்.”**

ஆம், அவர் தெளிந்த புத்தியை இழந்து, உலக ஜனங்களை போன்று விசுவாசிக்கத் தொடங்கினான். இதை மனதில் வைத்தவர்களாக மீண்டுமாக பாடத்திற்கு செல்லுவோம்,

**1 சாமுவேல் 28:10,11**

**“அப்பொழுது சவுல், இந்தக் காரியத்திற்காக உனக்குப் பொல்லாப்பு வராது என்பதை கர்த்தருடைய ஜீவனைக்கொண்டு சொல்லுகிறேன் என்று அவளுக்குக் கர்த்தர்மேல் ஆணையிட்டான். அப்பொழுது**

**அந்த ஸ்திரீ, உமக்கு நான் யாரை எழும்பிவரப் பண்ண வேண்டும் என்றதற்கு, அவன் சாமுவேலை எழும்பி வரப்பண்ணவேண்டும் என்றான்."**

பயந்திருந்த அந்த அஞ்சனக்காரி இராஜாவாகிய சவுல், அவளுடைய உயிருக்கு உத்தரவாதம் கொடுத்த பின்பு, அவரை நம்பி, மரணத்திலிருந்து அவருக்காக யாரை எழுப்ப வேண்டும் என்று கேட்டாள் ?

பின்பு நடந்ததை குறித்து வாசிக்கையில்,

**1 சாமுவேல் 28:12**

**"அந்த ஸ்திரீ சாமுவேலைக் கண்ட மாத்திரத்தில் மகா சத்தமாய்க் கூப்பிட்டு, சவுலை நோக்கி, ஏன் என்னை மோசம்போக்கினீர் ? நீர்தான் சவுலாச்சுதே என்றாள்."**

இங்கு அந்த அஞ்சனக்காரி சாமுவேலை கண்டவுடன் பயந்து அலறி இராஜாவாகிய சவுலை சரியாக அடையாளம் கண்டுக்கொண்டாள்.

**இது எப்படி நடந்தது ?**

பதில் மிகவும் எளிதே, சாமுவேலின் ஆத்துமா எழுந்து வருகையில், எப்போதும் போல இராஜாவாகிய சவுலை அவருடைய பெயரைச் சொல்லி வாழ்த்தியிருக்கவேண்டும்.



உதாரணமாக, “வணக்கம் சவுல் இராஜாவே” என்று வணங்கியிருக்க கூடும். தொடர்ந்து வாசிக்கையில்,

**1 சாமுவேல் 28:9**

**“ராஜா அவளைப் பார்த்து, நீ பயப்படாதே, நீ காண்கிறது என்ன என்று கேட்டான். அதற்கு அந்த ஸ்திரீ, தேவர்கள் பூமிக்குள்ளிருந்து ஏறிவருகிறதைக் காண்கிறேன் என்று சவுலுக்குச் சொன்னாள். அவருடைய ரூபம் என்ன என்று அவளைக் கேட்டான். அதற்குஅவள், சால்வையை போர்த்துக்கொண்டிருக்கிற ஒரு முதிர்ந்த வயதான மனுஷன் எழும்பிவருகிறான் என்றாள், அதினாலே சவுல் அவன் சாமுவேல் என்று அறிந்து கொண்டு, தரை மட்டும் முகங்குனிந்து வணங்கினான்.”**



சவுல் இராஜா சாமுவேலை பார்க்க முடியவில்லை என்பதை தயவு செய்து கூர்ந்து கவனிக்கவும்.

ஆம், இராஜாவாகிய சவுல் ஒன்றும் காணாததினால், அவள் என்ன காண்கிறாள் என்று அந்த ஸ்திரீயிடமே கேட்டுத் தெரிந்து கொள்ள வேண்டியதாயிருந்தது.

கீழ் வரும் வார்த்தைகளை கவனியுங்கள்,

**“...நீ காண்கிறது என்ன என்று கேட்டான்...”**

**“...அவருடைய ரூபம் என்ன என்று அவளைக் கேட்டான்...”**

பின்பு அவன் சாமுவேலை பற்றின அடையாளங்களை அந்த ஸ்திரீயினிடத்தில் கேட்டு அறிந்துக்கொண்டார்.

**“...சால்வையைப் போர்த்துக்கொண்டிருக்கிற ஒரு முதிர்ந்த வயதான மனுஷன் எழும்பிவருகிறான்...”**

ஆம், அன்றைய தினத்தில் சால்வையானது தீர்க்கதரிசிகளுக்கு ஒரு அடையாளமாக இருந்தது.

பின்பு நாம் சவுல், சாமுவேலின் ஆவியோடு பேசினதை வாசிக்கையில்,

**1 சாமுவேல் 28:15**

**"சாமுவேல் சவுலை நோக்கி, நீ என்னை எழும்பிவரப்பண்ணி, என்னைக் கலைத்தது என்ன என்று கேட்டான். அதற்குச் சவுல், நான் மிகவும் நெருக்கப்பட்டிருக்கிறேன், பெலிஸ்தர் எனக்கு விரோதமாய் யுத்தம் பண்ணுகிறார்கள், தேவனும் என்னைக் கைவிட்டார், அவர் தீர்க்கதரிசிகளினாலாவது, சொப்பனங்களினாலாவது எனக்கு மறு உத்தரவு அருளுகிறதில்லை, ஆகையால் நான் செய்யவேண்டியதை நீர் எனக்கு அறிவிக்கும்படிக்கு உம்மை அழைப்பித்தோம் என்றான்."**



இங்கு சாமுவேல் அந்த அஞ்சனக்காரியின் மூலம் சவுல் இராஜாவிடம் பேச ஆரம்பித்தார். அவர் இராஜாவாகிய சவுல் தேவனுக்கு விரோதமாத செய்த அனைத்து கீழ்ப்படியாமையின் செய்கைகளையும் அறிவித்தார். பின்பு பெலிஸ்தியர்களுக்கு எதிரான யுத்தத்தை குறித்தும், அதை நடத்துவதற்கு தகுந்த ஆலோசனைகளையும், அறிவுரைகளையும் இராஜாவாகிய சவுல் சாமுவேலிடம் கேட்டு மன்றாடினார். இதற்கு பதிலாக சாமுவேல் ஒரு தீர்க்கதரிசனத்தை கூறினார்.

**1 சாமுவேல் 28:18,19**

**"நீ கர்த்தருடைய சொற்கேளாமலும், அமலேக்கின்மேல் அவருக்கு இருந்த கோபத்தின் உக்கிரத்தைத் தீர்க்காமலும் போனபடியினால், கர்த்தர் இன்றைய தினம் உனக்கு இந்தப் பிரகாரமாகச் செய்தார். கர்த்தர் உன்னுடைய ஜனமாகிய இஸ்ரவேலரையும் பெலிஸ்தர் கையில் ஒப்புக்கொடுப்பார், நாளைக்கு நீயும் உன் குமாரரும் என்னோடிருப்பீர்கள், இஸ்ரவேலின் பாளயத்தையும் கர்த்தர் பெலிஸ்தரின் கையில் ஒப்புக்கொடுப்பார் என்றான்."**

ஆம், சவுலின் எதிர்காலத்தைக் குறித்து சாமுவேல் உடனடியாக ஒரு தீர்க்கதரிசனத்தை கூறுகிறார். எப்படியெனில்,

**"...நாளைக்கு நீயும் உன் குமாரரும் என்னோடிருப்பீர்கள்..."** (மரண நிலைமையில்) என்றார்.

இப்படியாக, சவுல் இராஜாவின் மன்றாட்டிற்கு பதிலாக, சாமுவேலின் "ஆவி" ஒரு தீக்கதரிசனத்தை உரைத்தது.

**அந்த தீர்க்கதரிசனம் நிறைவேறியதா ?**

பெலிஸ்தியர்களுடன் நடந்த யுத்தத்தைக் குறித்து நாம் சாமுவேலின் புத்தகத்தில் வாசிக்கையில்,

**1 சாமுவேல் 31:1-3**

**"பெலிஸ்தர் இஸ்ரவேலரோடே யுத்தம் பண்ணினார்கள், இஸ்ரவேலர் பெலிஸ்தருக்கு முன்பாக முறிந்தோடி, கில்போவாமலையிலே வெட்டுண்டு விழுந்தார்கள். பெலிஸ்தர் சவுலையும் அவன் குமாரனையும் நெருங்கித் தொடர்ந்து சவுலின் குமாரராகிய யோனத்தானையும் அபினதாபையும்மல்கிசூகாவையும் வெட்டிப்போட்டார்கள். சவுலுக்கு விரோதமாய் யுத்தம் பலத்தது, வில்வீரர் அவனைக் கண்டு நெருங்கினார்கள். அப்பொழுது சவுல் வில்வீரரால் மிகவும் காயப்பட்டு...."**


இதை தொடர்ந்து பெலிஸ்தர்களோடு நடந்த யுத்தத்தில் இராஜாவாகிய சவுல் தோல்வி அடைந்து, அவனும் அவனுடைய இரண்டு குமாரர்களும் மரித்தார்கள். (வசனம் – 2 )



**நாம் வசனத்தை கவனிக்கையில் திர்க்கதரிசனம் நிறைவேறியது போல தோன்றுகிறது. ஆனால் சற்று......நிதானிப்போம்.**

**2 சாமுவேல் 2:8-10**

**“சவுலின் படைத்தலைவனான நேரின் குமாரனாகிய அப்னேர் சவுலின் குமாரனாகிய இஸ்போசேத்தை மகனாயீமுக்கு அழைத்துக்கொண்டுபோய், அவனைக் கீலேயாத்தின் மேலும், அஷூரியர் மேலும், யெஸ்ரயேலின் மேலும், எப்பிராயீமின் மேலும், பென்யமீனின் மேலும், இஸ்ரவேலனைத்தின் மேலும் ராஜாவாக்கினான். சவுலின் குமாரனாகிய இஸ்போசேத் இஸ்ரவேலின்மேல் ராஜாவாகிறபோது, நாற்பது வயதாயிருந்தான், அவன் இரண்டு வருஷம் ராஜ்யபாரம்பண்ணினான். யூதா கோத்திரத்தார்மாத்திரம் தாவீதைப் பின்பற்றினார்கள்.”**




பார்த்தீர்களா ! சவுலுடைய குமாரர்களில் ஒருவன் மரிக்க வில்லை. அவன் பெயர் இஸ்போசேத். மேலும், அவன் இராஜாவாகி, வெகு நாட்கள் கழித்து கொலையுண்டு மரித்தான். **(1 சாமுவேல் 4 : 8)**

**தேவனுடைய பரிசுத்த தீர்க்கதரிசியாகிய சாமுயேலின் தீர்க்கதரிசனம் 90% - 95% தான் நிறைவேறுமா ?**

**நிச்சயமாக இல்லை !!**

**பின்பு எழுந்து வந்த சாமுவேல் யாராக இருக்கக் கூடும் ?**

**இது “பொய்க்கு பிதாவாகிய” சாத்தானை தவிர வேறு யாரும் அல்ல.**

ஆம், தீர்க்கதரிசியாகிய சாமுவேலைப் போல எழுந்து, நடித்து,

பேசினான். அது, அவன் ஆதியில் ஏதேன் தோட்டத்தில் சொன்ன முதல் பொய்யை உறுதிப்படுத்துவதற்கும், **(ஆதியாகமம் 3 : 4)** மரணத்திற்கு பின்பு மனிதன் உயிரோடு இருக்கிறான் என்று நிருபிப்பதற்கும் தீர்க்கதரிசியாகிய சாமுவேலைப் போல நடித்து ஒரு தீர்க்கதரிசனத்தையும் சொன்னான்.

ஆம், அவன் சவுல் இருந்த சகல சூழ்நிலைகளையும், பெலிஸ்தர்களுடனான யுத்தத்தை குறித்தும் நன்கு அறிந்திருந்தான். அது மாத்திரமல்லாமல், அக்காலத்திலே யுத்தத்திற்கு செல்லும் போது, இராஜாவும் அவர் குமாரரும் முன் செல்ல, மற்ற படைகள் அனைத்தும் அவர்கள் பின்னாலே செல்லும். அதனால், தோல்வியை சந்திக்கிற இராஜாவும் அவன் குமாரரும், மரிக்க அல்லது படுகாயம் அடைய நேரிடும். இவை அனைத்தையும் சாத்தான் அறிந்திருந்து எதிர்காலத்தில் நடக்கக்கூடிய சம்பவங்களை அருமையாக யூகித்தான்.

**ஆனாலும், அவனுடைய யூகம் 100% நிறைவேறும் அளவிற்கு துல்லியமாக அமையவில்லை.**

அவனுடைய வஞ்சகங்களும், யூகங்களும் தோல்வி அடைந்து, அதன் மூலம் அவனுடைய வேலைகள் வெளியரங்கமாகிறது. இப்படி, ஆயிரக்கணக்கான வருடங்களாக **சாத்தான் மக்களை அஞ்சனம் பார்க்கிறவர்கள் மூலமாகவும், குறிசொல்லுகிறவர்கள் மூலமாகவும் வஞ்சித்து வருகிறான்.** மேலும், எதிர்காலத்தைக் குறித்து தீர்க்கதரிசனம் அறிவிப்பதற்கும் வல்லமை இருப்பதாக சொல்லிக்கொண்டு இருக்கிறான். அவன் ஒருவருடைய கடந்த காலத்தைக் குறித்து மிகத் தெளிவாக அறிவிப்பதினால் கேட்கக்கூடியவர்களின் நம்பிக்கைக்கு பாத்திரவானாக மாறி, பின் நடக்கக்கூடிய காரியங்கள் சிலவற்றை யூகித்து சொல்லுகிறான். ஆனால், இந்த செய்திகள் முழுவதும் நம்பக்கூடியதாக இருக்காது.

ஏன் என்றால், **எதிர்காலத்தை குறீத்து தேவன் ஒருவரே அறிவார்.** அதேபோல் இங்கு சாத்தான் சாமுவேலைப் போன்று வேடமிட்டு இராஜாவாகிய சவுலை வஞ்சித்தான். இதை வேதம் தெளிவாக சொல்லாவிட்டாலும்,

**"அங்கே கொஞ்சமும் இங்கே கொஞ்சமும்"**
– ஆக ஆராய்ந்து நாம் அறிந்து கொண்டோம்.

இப்பொழுது நாம் இரண்டாவது பகுதிக்கு செல்லுவோம்.

2

**மத்தேயு 17:1-3**

**“ஆறுநாளைக்குப் பின்பு, இயேசு பேதுருவையும் யாக்கோபையும் அவனுடைய சகோதரனாகிய யோவானையும் கூட்டிக்கொண்டு தனித்திருக்கும்படி உயர்ந்த மலையின்மேல் போய், அவர்களுக்கு முன்பாக மறுரூபமானார், அவர் முகம் சூரியனைப்போலப் பிரகாசித்தது, அவர் வஸ்திரம் வெளிச்சத்தைப்போல வெண்மையாயிற்று. அப்பொழுது மோசேயும் எலியாவும் அவரோடே பேசுகிறவர்களாக அவர்களுக்குக் காணப்பட்டார்கள்.”**



இங்கு இயேசு மறுரூபமான சம்பவத்தை மத்தேயு பதிவு செய்திருக்கிறார்.



**இதைக் குறித்து நாம் என்ன சொல்லுவோம் ?**

**அநேகர் நம்புவது போல் மரித்த மோசே மற்றும் எலியாவின் “ஆத்துமா” மீண்டுமாக காணப்பட்டதா ?**

இது உண்மையாக இருந்தால் மரிக்கின்ற ஆத்துமா, மரித்த பின் உயிரோடிருப்பதில்லை என்ற வேதாகம உபதேசத்திற்கு மாறுபட்டதாக இருக்குமே. இந்த கேள்விகளுக்கான பதிலை நாம் ஆராய்வதற்கு முன்பு, யோவான், யாக்கோபு, பேதுருவும் மோசே மற்றும் எலியாவை எப்படி அடையாளம் கண்டு கொண்டார்கள் என்பதை அறிய ஆவலாயிருக்கிறோம்.

**அந்நாட்களில் புகை படங்கள் கூட கண்டு பிடிக்கப்படவில்லை.**

**அப்படியிருக்க, மோசேவையும் எலியாவையும் அவர்கள் எப்படி அடையாளம் கண்டு கொண்டார்கள் ?**

ஆம், இதற்கான பதிலை 3ம் வசனத்தில் வாசிப்போம்.

**“அப்பொழுது மோசேயும் எலியாவும் அவரோடே பேசுகிறவர்களாக அவர்களுக்குக் காணப்பட்டார்கள்.”**



**ஆம், அவர்களுடைய உரையாடலின் போது இயேசு அவர்களை பெயர் சொல்லி அழைத்திருக்கவேண்டும், அல்லது பேசுகிறவர்கள் மற்றவர்களுடைய பெயர்களை உச்சரித்திருக்க வேண்டும்.**

இதை கவனித்திருந்த அப்போஸ்தலர்கள் அவர்கள் உரையாடலை கேட்ட பின்பு இயேசுவோடு பேசின இந்த இருவரையும் அடையாளம் கண்டிருக்க வேண்டும். ஆனால், இந்த சம்பவம் “மரணத்தில் மரிக்கும்” ஆத்துமா பற்றின வேத உபதேசங்களுக்கு விரோதமாக இருக்கிறது.

உண்மையில், மோசே மற்றும் எலியா மரித்திருக்க, அவர்களுடைய “ஆத்துமா” உயிரோடிருப்பது எப்படி ? இதற்கான பதிலை இயேசுவின் வார்த்தைகள் மூலம் கேட்டறிவோம்.

**மத்தேயு 17:9**

**“அவர்கள் மலையிலிருந்து இறங்குகிறபோது, இயேசு அவர்களை**

**நோக்கி... மனுஷகுமாரன் மரித்தோரிலிருந்து எழுந்திருக்கும்வரைக்கும் இந்த தரிசனத்தை ஒருவருக்கும் சொல்லவேண்டாம் என்று கட்டளையிட்டார்."**

ஆம், "**இந்த தரிசனத்தை** **ஒருவருக்கும் சொல்ல வேண்டாம்**" என்ற இந்த வார்த்தைகள் நமக்கு திறவுகோலாக இருக்கிறது.

ஆம், வேதத்தில் பதிவாகியிருக்கிற தீர்க்கதரிசனங்களாகிய

**வெளிப்படுத்துதலின் புத்தகம்,**

**அப்போஸ்தலர் 10 : 10-16.-ல் அப்போஸ்தலர் பேதுரு கண்ட தரிசனம்**



**1 கொரிந்தியர் 12 : 1-4. -ல் அப்போஸ்தலர் பவுல் கண்ட தரிசனம்** போல இதுவும் வேதாகமத்திலிருக்கிற தரிசனமாகும்.

**தரிசனம் என்பது உண்மை சம்பவம் அல்ல மாறாக அது ஒரு காணக்கூடிய காட்சியாகும்.**

**உங்களுக்கு தெரியுமா ?**

இன்று நாம் அனுதினமும் அநேக தரிசனங்களை வித விதமாக காண்கிறோம். அதுவும் நம்முடைய வீடுகளில் காண்கிறோம் – ஆம், அவைகளை தொலைக் காட்சிப் பெட்டியின் மூலமாக காண்கிறோம். ஆம், அதில் மரித்த அநேகர் நடப்பதையும், பேசுவதையும் நடனமாடுவதையும் நேரில் பார்க்கிறோம்.

**இது உண்மையா ?**

**அவர்கள் உண்மையில் உயிரோடு இருக்கிறார்களா ?**

**நிச்சயமாக இல்லை. இவைகள் தரிசனங்களே.**

## அப்படி என்றால், இந்த தரிசனத்தின் பொருள் என்ன ?

இது "இராஜாதி இராஜாவும், கர்த்தாதி கர்த்தாவுமாகிய" இயேசு கிறிஸ்துவுடைய ஆளுகையின்கீழ் பூமியில் ஸ்தாபிக்கப்பட இருக்கும் தேவனுடைய இராஜ்யத்தின் இரு பாகங்களை குறிக்கும் காட்சியாகும்.



**மோசே** கண்ணுக்கு தெரிகிற ஆளுகையின் மாம்சத்திற்குரிய பாகத்தை குறிக்கிறார் – முற்பிதாக்கள் அல்லது இயேசுவுக்கு முன் வாழ்ந்த தேவனுடைய விசுவாசிகள் அதில் மாம்சத்தில் ஆளுகிறவர்களாக இருப்பார்கள்.

**எலியா** கண்ணுக்கு தெரியாத அல்லது ஆவிக்குரிய பாகத்தை குறிக்கிறார் – இவர்கள் சபை (அ) கிறிஸ்துவுக்கு பின் வாழ்ந்த விசுவாசிகள், ஆவியில் ஆளுகிறவர்களாக இருப்பார்கள்.

**இயேசு, இவர்கள் இருவருடனும் இணைந்து ஆளுகை செய்வார்** என்பதை கீழ் வருமாறு வசனத்தில் காண்கிறோம்.

**"அப்பொழுது மோசேயும் எலியாவும் அவரோடே பேசுகிறவர்களாக அவர்களுக்குக் காணப்பட்டார்கள்."**

**ஆம், இது வரவிருக்கிற இயேசு மற்றும் அவருடைய இராஜ்யத்தின் மகிமையை பற்றின காட்சியாகும்.**

3

மூன்றாவது பகுதியை காணலாம்.

**லூக்கா 23:43**

**"இயேசு அவனை நோக்கி – இன்றைக்கு நீ என்னுடனே கூடப் பரதீசிலிருப்பாய் என்று மெய்யாகவே உனக்குச் சொல்லுகிறேன் என்றார்."**

ஒவ்வொரு **"புனித வெள்ளி"** அன்றும் நமக்கு நினைவூட்டப்படுகிற. மிக பிரபலமான வசனம், "மனம் திருந்திய கள்ளன்" இயேசுவிடம் மன்னிப்பு கேட்ட அன்றைய தினமே பரலோகம் சென்றதாக போதிக்கப்படுகிறது.

**அப்படி நடந்ததா?** இதை குறித்து வாசிக்கையில்,

**"இயேசுவை நோக்கி - ஆண்டவரே நீர் உம்முடைய ராஜ்யத்தில் வரும்போது அடியேனை நினைத்தருளும் என்றான்."**

**- லூக்கா 23:42**



அந்த கள்ளனுடைய வேண்டுகோளை கவனிக்கவும்.

**"ஆண்டவரே நீர் உம்முடைய ராஜ்யத்தில் வரும்போது அடியேனை நினைத்தருளும் என்றான்."**

**அவனுடைய வேண்டுகோள் இயேசுவின் ராஜ்யத்தில் ஒரு இடமே தவிர அநேகர் நினைப்பது போல் பரலோகம் செல்ல வேண்டும் என்பது அல்ல.**

மேலும், தமிழ் மொழிப்பெயர்பில் இந்த வசனத்தில் கள்ளன் இயேசுவை நோக்கி ஆண்டவரே என்று அழைப்பதாக இருப்பது தவறாகும். அவன் சாதாரணமாக "இயேசு" என்றே அழைத்தான். ஏன் என்றால், உண்மையில் அந்த கள்ளன் அவரை ஆண்டவராக அடையாளம் காணவில்லை.

இதை தவிர, வேறொரு முக்கியமான விஷயத்தை நாம் கவனிக்க வேண்டும். அது என்னவென்றால், அவருடைய சீஷர்களுக்கும், அப்போஸ்தலர்களுக்கும், இயேசு பரலோக வாய்ப்பை வாக்களித்திருந்தும், அவர்களில் ஒருவரும் பரலோகம் செல்ல வேண்டும் என்று எந்த சூழ்நிலையிலும் அவரை கேட்டதில்லை.

## யோவான் 14:3

**“நான் உங்களுக்காக ஒரு ஸ்தலத்தை ஆயத்தம் பண்ணின பின்பு, நான் இருக்கிற இடத்திலே நீங்களும் இருக்கும்படி, நான் மறுபடியும் வந்து உங்களை என்னிடத்தில் சேர்த்துக்கொள்ளுவேன்...”**

ஆம், அவர்கள் அனைவருக்கும் பரலோகம் செல்ல வேண்டும் என்கிற எண்ணமோ, விருப்பமோ என்றுமே இருந்ததில்லை !

உண்மையில், 3½ வருட காலம் இயேசுவோடு அவர்கள் வாழ்ந்ததின் நோக்கம் நிச்சயமாக பரலோகம் செல்லுவதற்கல்ல. அவர்களுடைய நோக்கம் குறித்து நாம் வாசிக்கையில்,



## அப்போஸ்தலர் 1:6

**“அப்பொழுது கூடி வந்திருந்தவர்கள் அவரை நோக்கி – ஆண்டவரே, இக்காலத்திலா ராஜ்யத்தை இஸ்ரயேலுக்குத் திரும்பக் கொடுப்பீர் என்று கேட்டார்கள்.”**

ஆம், அவர்களுடைய நோக்கம் இங்கு தெளிவாக உள்ளது. பூமிக்குரிய இராஜ்யத்தில், உலகில் உள்ள சகல நாடுகளிலும் இஸ்ரயேல் உயர்த்தப்பட்டிருக்கும் போது, அந்த இராஜ்யத்தில்

தங்களுக்கான பங்கை எதிர்பார்த்திருந்தனர். இப்படியாக, இயேசுவின் பூமிக்குரிய இராஜ்யத்தில், தங்களில் யார் பெரியவனாக இருப்பான் என்று, ஓய்வு நேரங்களில் வாக்குவாதங்கள் செய்யும் அளவு, பூமிக்குரிய அளுகையில் தங்கள் பங்கை எதிர்பார்த்தனர்.

இதை குறித்து வாசிக்கையில்,

**லூக்கா 22:24**

**“அன்றியும் தங்களில் எவன் பெரியவனாயிருப்பான் என்று அவர்களுக்குள்ளே வாக்குவாதம் உண்டாயிற்று.”**

ஆம், அப்போஸ்தலர்களுக்கு பரலோகத்தைப் பற்றியோ, அல்லது அவைகளுடைய ஆசீர்வாதங்களைப் பற்றியோ பெந்தெகோஸ்தே நாளில் **பரிசுத்த ஆவியின் அபிஷேகம் பெறும் வரை ஒன்றும் அறியாதவர்களாக இருந்தார்கள்.**

**இயேசுவின் சீஷர்களே இந்த சிந்தனையில் இருந்திருக்கும் போது, கள்ளன் இயேசுவை ஆண்டவர் என்று அறிவது எப்படி ?**

**இப்படியிருக்க, உண்மையில் அங்கு நடந்தது என்ன?**

**மத்தேயு 27:44**

**“அவரோடேகூடச் சிலுவைகளில் அறையப்பட்ட கள்ளரும் அந்தப்படியே அவரை நிந்தித்தார்கள்.”**


ஆரம்பத்தில் அந்த கள்ளர்களும் அவரை நிந்திக்கவே செய்தார்கள். இதை நாம் மாற்கு 15 : 32 –லும் வாசிக்கிறோம். பின்பு சிறிது நேரம் இயேசுவை கவனித்த பின்பு அவர்களில் ஒருவன் இயேசு எந்தக் குற்றத்தையும் செய்யாத நிரபராதி என்று அறிந்து கொண்டான்.

இதைக் குறித்து நாம் வாசிக்கையில்,

**லூக்கா 23:40,41**

**“மற்றவன் அவனை நோக்கி – நீ இந்த ஆக்கினைக்குட்பட்டவனாயிருந்தும் தேவனுக்குப் பயப்படுகிறதில்லையா ? நாமோ நியாயப்படி தண்டிக்கப்படுகிறோம்,**

**நாம் நடப்பித்தவைகளுக்குத் தக்க பலனை அடைகிறோம், இவரோ தகாததொன்றையும் நடப்பிக்கவில்லையே என்று அவனைக் கடிந்துகொண்டு....."**



**லூக்கா 23:38 - "இவன் யூதருடைய ராஜா" என்று கிரேக்கு, லத்தீன் மற்றும் எபிரெயு பாஷைகளில் எழுதப்பட்டிருந்தது.**

**யோவான் 19:19 - "பிலாத்து ஒரு மேல்விலாசத்தை எழுதி சிலுவையின்மேல் போடுவித்தான், அதில் நசரேயனாகிய இயேசு யூதருடைய ராஜா என்று எழுதியிருந்தது."**

ஆம், இன்றைக்கும் சிலுவையின் வரை படங்களில் *"INRI"* என்று எழுதியிருக்கும் பலகையை காண்கிறோம். அது லத்தீன் மொழியில் **"நசரேயனாகிய இயேசு யூதருடைய ராஜா"** என்ற வாக்கியத்தின் சுருக்கமாகும். அதை பிரித்துப் பார்க்கும் போது,

| I | N | R | I |
|---|---|---|---|
| **Isus** | **Nazarainus** | **Rex** | **Idurum** |
| **இயேசு** | **நசரேயனாகிய** | **இராஜா** | **யூதர்களுடைய** |

இதுவும் அல்லாமல் இயேசு பிலாத்தினிடத்தில் உரையாடினதையும் அந்தக் கள்ளன் கேட்டிருந்தான்.

## யோவான் 18:36,37

**“இயேசு பிரதியுத்தரமாக - என் ராஜ்யம் இவ்வுலகத்திற்குரியதல்ல, என் ராஜ்யம் இவ்வுலகத்திற்குரியதானால் நான் யூதரிடத்தில் ஒப்புக்கொடுக்கப்படாதபடிக்கு என் ஊழியக்காரர் போராடியிருப்பார்களே, இப்படியிருக்க என் ராஜ்யம் இவ்விடத்திற்குரியதல்ல என்றார். அப்பொழுது பிலாத்து அவரை நோக்கி - அப்படியானால் நீ ராஜாவோ என்றான். இயேசு பிரதியுத்தரமாக - நீர் சொல்லுகிறபடி நான் ராஜாதான், சத்தியத்தை குறித்துச் சாட்சிகொடுக்க நான் பிறந்தேன், இதற்காகவே இந்த உலகத்தில் வந்தேன், சத்தியவான் எவனும் என் சத்தம் கேட்கிறான் என்றார்.”**



ஆம், இவை எல்லாவற்றையும் கேட்டிருந்த அவன், வெகு அருகில், இயேசுவின் தலைக்கு மேல் இருந்த பலகையை வாசித்த பின்பு, ஒரு வேளை இயேசு ஒரு **இராஜா என்றும், அவருக்கு ஒரு ராஜ்யம் இருக்கக்கூடும் என்றும் நினைத்து,** இயேசுவிடம் இந்தக் கோரிக்கையை வைத்தான். மேலும், இதை கேட்பதில் எந்தத் தவறும் இல்லை என்றும் உணர்ந்திருந்தான்.

### ஆனால், இயேசுவின் ராஜ்யம் வந்தவிட்டதா?

### இல்லை என்பதே பதிலாகும்.

அப்படியானால், இயேசுவிடமிருந்து அந்த பாக்கியத்தை பெற இன்னும் காத்துக்கொண்டிருக்க வேண்டும். ஆகையால், அவன் வேண்டிக்கொண்டதை <u>அன்றைய தினமே</u> நிச்சயமாக பெற்றிருக்க

முடியாது. ஏன் என்றால் இயேசு தாமே அன்றைய தினம் எங்கு இருந்தார் என்று நாம் வாசிக்கையில்,

## அப்போஸ்தலர் 2 : 31

**"அவன் கிறிஸ்துவினுடைய ஆத்துமா பாதாளத்திலே விடப்படுவதில்லையென்றும், அவருடைய மாம்சம் அழிவைக்காண்பதிலலையென்றும் முன்னறிந்து, அவர் உயிர்த்தெழுதலைக்குறித்து இப்படிச் சொன்னான்."**



ஆம், அவர் மூன்று நாள் பாதாளத்தில் இருந்த பின்பு மூன்றாம் நாள் உயிர்த்தெழுந்தார் என்று அறிகிறோம். இவை அனைத்தையும் மனதில் கொண்டவர்களாக கீழுள்ள வசனத்தை ஆராய்கையில், அதில் உள்ள வேறொரு முக்கிய மாற்றத்தைக் காணலாம், அது வாக்கியத்தில் வார்த்தைகளை திருத்தி எழுதுவது குறித்ததாகும்.

## லூக்கா 23:43

**"இன்றைக்கு நீ என்னுடனேகூடப் பரதீசிலிருப்பாய் என்று மெய்யாகவே உனக்கு சொல்லுகிறேன் என்றார்."**

இங்கு இயேசு **"மெய்யாகவே உனக்கு சொல்லுகிறேன்"** என்பதின் மூலம் கள்ளனுக்கு ஓர் உறுதியளித்தார்.

மேலும், **“நீ என்னுடனேகூடப் பரதீசிலிருப்பாய்” (தேவனுடைய ராஜ்யம் – 11கொரிந்தியர் 12:3)** என்பது உத்திரவாதமான உறுதியை குறிக்கிறது.

இவ்வாக்கியத்தில் பிரிவு குறி **(Comma)** பயன் படுத்தப்படும் விதமானது, வாக்கியத்தின் பொருளை முற்றிலுமாக மாற்ற கூடியதாக இருக்கிறது. மேலும் வேதாகமம் எழுதப்பட்ட நாட்களில் குறியீடுகள் **(Punvtuations)** மூல பிரதிகளில் பயன்படுத்தவில்லை என்பதை நினைவில் கொள்ள வேண்டும்.

## உதாரணம் 1

**“Verily, I say unto thee, today shalt thou the....”**

- என்பது தமிழில், **“மெய்யாகவே, நான் உனக்கு சொல்லுகிறேன், இன்று என்னோடு கூட பரதீசிலிருப்பாய்...”**

இது கள்ளன், அன்றைய தினமே தேவனுடைய இராஜ்யத்திற்கு சென்றதாக பொருள் தருகிறது. ஆனால், அப்படியிருக்க முடியாது என்று நாம் அறிவோம். ஏன் என்றால், தேவனுடைய இராஜ்யம் அன்றும், அதற்கு பின்பு இரண்டாயிர வருட காலமாகி இன்று வரை ஸ்தாபிக்கப்படவில்லை என்று நாம் அறிவோம்.

## உதாரணம் 2

**“Verily, I say unto thee today, shalt thou the....”**

- என்பது தமிழில், **“மெய்யாகவே, நான் உனக்கு சொல்லுகிறேன் இன்று, என்னோடு கூட பரதீசிலிருப்பாய்...”**

மேல் உள்ள வசனத்தில் பிரிவு குறி (Comma) பயன்படுத்தப்பட்ட விதம் கர்த்தரின் வார்த்தைக்கான சரியான பொருளை தருகிறது. இங்கு கர்த்தர் அவருடைய இராஜ்யம் வரும் பொழுது கள்ளனுக்கு அவன் வேண்டி கொண்ட ஆசீர்வாதத்தைத் தருவதாக அன்றைய தினம் உறுதியளித்ததை பொருள்படுத்துகிறது. மாறாக, அந்த ஆசீர்வாதத்தை அன்றைக்கே அவன் பெற்றதாக அர்த்தம் கொள்ள கூடாது.

மேலும், ஒரு ஆங்கில உதாரணத்தை காணலாம்.

**1. KILL HIM NOT, SPARE HIM.**

**2. KILL HIM, NOT SPARE HIM.**

மேல் சொல்லப்பட்ட வாக்கியத்தில் பிரிவு குறி அல்லது “கமா” இடம் மாறும் போது அதின் அர்த்தம் முழுமையாக மாறி எதிர்மாறான பொருளை தருகிறது.


**பல நூற்றாண்டுகளாக வேதாகமானது அதிகாரம் மற்றும் வசனம் வாரியாக பிரிக்கப்படாமலிருந்தது.**

பின்னாளில், கிட்டத்தட்ட 700 - 800 வருடங்களுக்கு முன்பு தான் நம் வேதாகமம் பிரிக்கப்பட்டது. **கார்டினல் ஹுகோ என்பவரால் கிபி 1236 ல் வேதாகமம் அதிகாரங்கள் வாரியாக பிரிக்கப்பட்டது.** பின்பு, **ராபி நாத்தான்** என்பவரால் **கிபி 1555**-ல் மறுபடியும் வசனங்களாக பிரிக்கப்பட்டு பின்பு **ஸடிவென்ஸ்** என்பவரால் ஆங்கில மொழியில் அச்சடிக்கப்பட்டது. இப்படியாக, அந்த கள்ளன் மரித்த நிலைமையில் இருக்கிறான்.

மேலும், இயேசுவின் இரண்டாம் வருகையில், உயிர்த்தெழுதலின் நாளிலே எழுந்து,

**“...முழங்கால் யாவும் முடங்கும்...இயேசுகிறிஸ்து கர்த்தரென்று நாவுகள் யாவும் அறிக்கைபண்ணும்...”**

நாளில் அவர் வாக்களிக்கப்பட்ட உன்னதமான நிலைமையை அடைவான். அப்பொழுது, நம்முடைய கர்த்தர் தம்முடைய மரணத்தின் தருவாயில் பேசின அன்பான வார்த்தைகள் நினைவு கூறப்படும்.



பின்பு தன்னை குறித்து வேதாகமத்தில், எழுதப்பட்ட காரியங்களை அவன் வாசித்து அறிந்து கொள்ளுவான். இன்னும் அநேகர் அவனிடத்தில் வந்து ஆண்டவர் சிலுவையில் பேசின கடைசி வார்த்தைகளை குறித்து விசாரிப்பார்கள், அவருடைய வேதனையான நிலைமையிலும் --

இப்படிப்பட்ட ஒரு காரியத்தை வாக்குறுதியாக கொடுத்தாரே என்று ஆச்சரியப்படுவார்கள்.

**ஆகவே நிச்சயமாகவே அந்தக் கள்ளன் அவருடைய மகிமையுள்ள ராஜ்யம் பூமியில் ஸ்தாபிக்கப்படும் போது நினைக்கப்படுவான்.**

4

நாலாவது பகுதியை வாசிக்கையில்,

**1 தெசலோனிக்கேயர் 5:23**

**"...உங்கள் ஆவி ஆத்துமா சரீரம் முழுவதும், நம்முடைய கர்த்தராகிய இயேசுகிறிஸ்து வரும் போது குற்றமற்றதாயிருக்கும்படி காக்கப்படுவதாக."**

**இதன் பொருள் என்ன ?**

இது ஒவ்வொருவருக்கும் தனித்தனியாக ஆத்துமா, ஆவி, சரீரம் என்று உள்ளதாக குறிப்பது போன்று உள்ளது.

இந்த வசனம் தெசலோனிக்கேய சபையில் இருந்த அநேகருக்கு எழுதப்பட்டிருந்ததை தயவு செய்து கவனிக்க வேண்டும். ஆனால், **அனைவருக்கும் ஒரே ஆவி, ஆத்துமா, சரீரம்,** இருப்பது போன்று சொல்லப்பட்டிருக்கிறது.

**இது எப்படி (அ) எவ்வகையில் சாத்தியமாகும் ?**

அல்லது **இந்த நிருபம் தெசலோனிக்கேயாவில் உள்ள யாரேனும் ஒருவருக்கு எழுதப்பட்டதா ?**



**1தெசலோனிக்கேயர் 1 : 1**

**"பவுலும், சில்வானும், தீமோத்தேயும் பிதாவாகிய தேவனுக்குள்ளும் கர்த்தராகிய இயேசுகிறிஸ்துவுக்குள்ளும் இருக்கிற தெசலோனிக்கேய சபைக்கு எழுதுகிறதாவது....."**

இது தனிப்பட்ட நபருக்கு எழுதப்படாமல் ஒட்டு மொத்த சபைக்கும் எழுதப்பட்டிருப்பதை குறிக்கிறது, நிச்சயமாக தெசலோனிக்கேய சபையில் ஒருவருக்கும் அதிகமான நபர்கள் இருந்தார்கள். உண்மையில் இந்த தெசலோனிக்கேயர் சபையில் அங்கத்தினர் அநேகர் இருந்தார்கள். ஒரு வேளை இந்த வாக்கியம் தனிப்பட்ட நபருக்காக எழுதப்பட்டிருந்தால்,

**....உங்கள் ஆவிகள்...ஆத்துமாக்கள், சரீரங்கள்....”** என்று குறிப்பிடப்பட்டிருக்க வேண்டும். **ஆனால் அப்படி எழுதப்படவில்லை.**

**பின், அநேக அங்கத்தினர்களையுடைய சபையானது ஒரே ஆவி, ஒரே ஆத்துமா ஒரே சரீரம் பெற்றிருப்பதாக சொல்லுவது எப்படி ?**

இதை குறித்து வாசிக்கையில்,

**எபேசியர் 4:4**

**“உங்களுக்கு உண்டான அழைப்பினாலே நீங்கள் ஒரே நம்பிக்கைக்கு அழைக்கப்பட்டதுபோல, <u>ஒரே சரீரமும், ஒரே ஆவியும்</u> உண்டு.”**

**ஆம், இங்கு நீங்கள் கவனித்தீர்களா ?**

இதை குறித்து மேலும் வாசிக்கையில்,

**அப்போஸ்தலர் 4:32**

**“விசுவாசிகளாகிய திரளான கூட்டத்தார் ஒரே இருதயமும் ஒரே மனமுமுள்ளவர்களாயிருந்தார்கள், ஒருவனாகிலும் தனக்குள்ளவைகளில் ஒன்றையும் தன்னுடையதென்று சொல்லவில்லை, சகலமும் அவர்களுக்கு பொதுவாயிருந்தது.”**

ஆம், **உயிருள்ள சரீரமாக, சபையும் ஒரே ஆத்துமாவாக** இருக்கிறது. ஆகவே அப்போஸ்தலராகிய பவுல் தெசலோனிக்கேயவில் உள்ள பட்டணத்திற்கு கடிதம் எழுதும் போது இந்தக் கருத்தை மனதில் வைத்துகொண்டு எழுதியிருக்க வேண்டும்.

**இப்படியாக, மரிக்கின்ற ஆத்துமாவை (சங்கீதம் 22 : 29) குறித்த வேதாகமத்தின் போதனை பழைய ஏற்பாடு மற்றும் புதிய ஏற்பாடு முழுவதும் இசைந்திருப்பதை நாம் கண்டோம்.**

மனித ஆத்துமா குறித்து வேறு சில சந்தேகத்துக்குரிய வசனங்களை தியானிக்கலாம்.

5

**சங்கீதம் 103:1-2**

**"என் ஆத்துமாவே, கர்த்தரை ஸ்தோத்திரி, என் முழு உள்ளமே, அவருடைய பரிசுத்த நாமத்தை ஸ்தோத்திரி....."**



ஆம், இந்த வார்த்தைகள், ஜெபத்தின் முடிவில் தேவனுக்கு துதியாக ஏறெடுக்கப்படும் பிரபலமான வார்த்தைகளாகும், இது மனிதனை ஆத்துமா என்று சொல்லாமல், மாறாக மனிதனுக்கு ஒரு ஆத்துமா இருப்பது போன்று சொல்லுகிறது.

**இது உண்மையா ?**

இந்த வசனம் கவிதை நடையில் எழுதப்பட்டிருக்கிறது கவிதை நடையில் ஒருவர் தன்னைப் பற்றி எழுதும் போது மூன்றாவது நபராக கருதி எழுதுவது இயற்கையே.

இதை மீண்டுமாக வாசிக்கையில்,

**சங்கீதம் 139:14**

**"நான் பிரமிக்கத்தக்க அதிசயமாய் உண்டாக்கப்பட்டபடியால், உம்மைத் துதிப்பேன், உமது கிரியைகள் அதிசயமானவைகள், அது என் ஆத்துமாவுக்கு நன்றாய்த் தெரியும்,"**

ஆம், இங்கு "என் ஆத்துமா" என்பது சங்கீதக்காரனாகிய தாவீது தன்னை மூன்றாவது நபராக எண்ணி எழுதும் வார்த்தையாகும்.

அது போலவே, சங்கீதம் 103 : 1,2 -ல் வார்த்தைகளும் அதின் ஆசிரியர் தன்னை மூன்றாவது நபராக கருதி எழுதும் வார்த்தைகளாகும்.

5

**லூக்கா 2:35**

**"உன் ஆத்துமாவையும் ஒரு பட்டயம் உருவிப்போகும் என்றான்."**



இங்கு சிமியோன் மரியாளைப் பார்த்து, அவளுடைய குமாரனாகிய இயேசுவின் நிமித்தம் படப்போகிற வேதனைகளைக் குறித்து தீர்க்கதரிசனமாக சொன்ன வசனமாகும். இது அடையாள மொழியில் உபயோகப் படுத்தப்பட்டிருக்கிறது.

உதாரணமாக "என் முதுகில் குத்தினான்" என்று நம்பிக்கைக்குரியவர் துரோகம் செய்வதை குறிப்பிடுவோம். அது போல, இங்கு சிமியோன் கிறிஸ்து அனுபவிக்கக்கூடிய பாடுகள் நிமித்தம் மரியாள் அடையப்போகும் கடுமையான துன்பங்களை குறித்து அடையாளமாக சொல்லி இருக்கிறார்.

இப்படியாக, ஆத்துமா என்பது உயிருள்ள மனிதன் அல்லது ஜீவ சுவாசம் மற்றும் சரீரத்தை உடைய உயிருள்ள ஜீவிகளை குறிக்கும். இந்த ஆத்துமாவுக்கு ஜீவன், சிந்தனை மற்றும் இருதயமும் உண்டு.

இப்பொழுது, நாம் "வேத முரண்பாடுகளின்" கடைசிப் பகுதியைப் பார்ப்போம்.


**லூக்கா 16 : 19 - 31**

இந்தப் பகுதியில் ஐசுவரியவான் மற்றும் லாசருவை பற்றி வாசிக்கிறோம். இவர்களுடைய மரணத்திற்கு பின்பு, அவர்களுடைய ஆத்துமா நரகத்திலும், பரலோகத்திலும் இருப்பதாக சொல்லப்படுகிறது.

இந்தப்பகுதியில் உள்ள சந்தேகத்தை நாம் அடுத்த பாடமாகிய ஆத்துமா, பாகம் – 3ல் தெளிவாகக் காணலாம்.

# ...ஆமென்...

For Private Circulation Only




NOT FOR SALE

For more Subjects contact: MESSENGERS OF CHRIST  E-mail: thekingdom1_6@yahoo.com